செய்தி வெளியீடு எண் : 696 நாள்: 29.04.2022

# தமிழ் வளர்ச்சித் துறை
# தமிழ்க் கவிஞர் நாள் விழா

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளைத் தமிழ்நாடு அரசு **தமிழ்க் கவிஞர் நாளாகக்** கொண்டாடிச் சிறப்புசெய்து வருகிறது. அவ்வகையில் தமிழ் வளர்ச்சித் துறையின் சீர்மிகு பணிகளில் ஒன்றாகப் புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 131ஆவது பிறந்தநாளைப் போற்றும் வகையில் தமிழ்க்கவிஞர் நாள் விழா சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இன்று 29.04.2022 தமிழக அரசால் வெகுசிறப்பாக கொண்டாடப்பெற்றது.

தமிழுக்கு நலம் சேர வேண்டுமென்றால், தமிழ்ப் படைப்பாளர்கள் போற்றப்படுதல் வேண்டும். தமிழின் நலமும் தமிழ்ப் படைப்பாளர்களின் நலமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. தற்காலத்தில் எண்ணற்ற தமிழ் நூல்கள் வெளிவருகின்றன. தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் 33 தலைப்புகளில் நூல்கள் பெறப்பட்டுச் சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசுத் தொகை ரூ.30,000/–உம் பாராட்டுச் சான்றிதழும் பரிசு பெற்ற நூலாசிரியரின் நூலினைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.10,000/–உம் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் இன்று நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 131ஆவது பிறந்தநாளில் 2017, 2018ஆம் ஆண்டுகளில் பரிசுக்குத் தெரிவு செய்யப்பெற்ற சிறந்த நூல்களுக்கான நூலாசிரியர் மற்றும் அவர்தம் படைப்புகளை வெளியிட்ட பதிப்பகத்தார் என மொத்தம் 146 பேருக்குப் பரிசுத் தொகைகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களால் வழங்கப்பட்டன. மேலும் அவர் தமது உரையில் தமிழ் வளர்ச்சித் துறையின் வகைப்பாடுகளில் ஒன்றான மகளிர் இலக்கியத்தில் நூல்கள் வரப்பெறாதது வருத்தத்தை அளிக்கிறது எனவும், பல தலைப்புகளில் சிறந்த நூல்கள் வெளிவரவில்லை எனவும் குறிப்பிட்டுத் தமிழைப் போற்றும் வகையில் அனைத்து வகைப்பாடுகளிலும் நூல்கள் வெளிவர வேண்டும்

எனவும், பரிசுக்கான பாராட்டுகள் அந்தந்த ஆண்டிலேயே வழங்கப்பெறவும் தமிழ் வளர்ச்சித் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தமிழ் வளர்ச்சித் துறையின் 'தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்' என்ற நூலின் – 11 தொகுதிகளையும் சங்க இலக்கியப் பாடல்களில் தெரிவு செய்யப்பட்ட பாடல்களை ஓவியங்களாகத் தயாரிக்கப்பட்ட எழிலேட்டையும் (காஃபி மேசை புத்தகம்) மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பெரும்புலவன் பாரதி பெருந்திட்டப் பணியின் கீழ் – 6 நூல்களையும் வெளியிட அவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் பணியிடத்தை முழுக் கூடுதல் பொறுப்பு வகித்துவந்த ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் இயக்குநர் திரு. செ. சரவணன் இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக, கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் தனது தலைமையுரையில் இதுவரை வெளிவராத பாரதிதாசன் கவிதைகளை முறையான ஆய்வுப் பதிப்புகளாக வெளியிட வேண்டுமெனவும், ஏப்ரல் மாதம் முழுவதும் பாரதிதாசன் மாதமாகக் கொண்டாடவேண்டுமெனவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டுக்கும் தலைசிறந்த கவிதைகளின் தொகுப்பு என்ற பெயரில் அந்தந்த ஆண்டின் தலைசிறந்த கவிதைகளைத் தொகுத்து வெளியிடவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தரும், பொது நூலகச் சட்டத் திருத்தக் குழுவின் தலைவருமான முனைவர் ம. இராசேந்திரன் முன்னிலையுரையும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் மேனாள் தமிழ் மொழித் துறைத் தலைவர் முனைவர் வ. ஜெயதேவன் அவர்கள் தமது வாழ்த்துரையில் தற்காலத் தமிழ்க் கவிஞர்கள் ஏராளமானோர் இருப்பினும் "தமிழ்தேசியத்தை முன்னிருத்தி கவிபாடிய கவிஞர் பாரதிதாசன் மட்டுமே" என்பதனால் பாவேந்தர் பாரதிதாசனாரின் பிறந்தநாளைத் தேர்வு செய்தது மிகப்பொருத்தமானதாகும் எனப் புகழுரை ஆற்றினார்.

கவிஞர் ஏர்வாடி இராதாகிருட்டினன் அவர்கள் எழுத்தாளர்கள் எழுதிக்கொண்டே இருக்க வேண்டும், கவிஞர்கள் பாடிக்கொண்டே இருக்க

வேண்டுமெனவும், தமிழ்க் கவிஞர் நாள் கொண்டாடப் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளே சிறந்த நாள் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், கவிஞர் கருமலைத் தமிழாழன் அவர்கள் தமது வாழ்த்துரையில் சங்கக் கால அரசர்கள் புலவர்களின் கருத்துக்களைக் கேட்டுச் செங்கோலாட்சியை நடத்தியது போலவே பாவேந்தர் பாரதிதாசனாரின் கருத்துகளை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பெயரன் கவிஞர் கோ. பாரதி அவர்கள், பாரதிதாசன் அவர்களை நினைவு கூர்ந்ததோடு அவர் எங்கும் எதற்காகவும் தோற்றதில்லை எனவும் பாரதிதாசனின் புகழினைக் குறித்து எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மேலும் இந்நிகழ்வில் கவிஞர்கள், எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், பதிப்பகங்களின் உரிமையாளர்கள் முதலியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவாகத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் (நி) திரு. ம.சி. தியாகராசன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in